DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE)
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIAMBADI, THIRUPATTUR DISTRICT

| | |
|---|---|
| Name | சரவணபாபு |
| Father's Name | வடிவேல் |
| Village | செட்டியப்பனூர் |
| Taluk | வாணியம்பாடி |
| Calling | ஐடி கம்பெனி |
| Age | 44 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of
**16.04.2025**

**OS.No. 79 /2017** **DW2**

**குறுக்கு விசாரணை**

நான் தற்போது எங்கு வேலை செய்கிறேன் என்றால் கோயம்புத்தூரில் வேலை செய்கிறேன். 2ம் பிரதிவாதியான எனது தாயாரும் என்னுடன் தான் இருக்கிறார் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி தற்போது எங்கு குடியிருக்கிறார் என்றால் செங்கல்பட்டுவில் குடியிருந்து வருகிறார். வழக்கு சொத்தில் தற்போது நான் குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல நான் அங்கு தான் இருக்கிறேன். நான் வழக்கு சொத்தில் தான் குடியிருக்கிறேன் என்பதற்கு ஏதாவது சான்றாவனம் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் என்னுடைய ஆதார் அட்டையை ஆவணமாக தாக்கல் செய்திருக்கிறேன்.

1. என்னுடைய தகப்பனார் இறந்த பிறகு வழக்குரை மற்றும் ஆவணங்களை படித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். எனக்கு தமிழ் படிக்க தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய முதல் விசாரணை

வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் என்னுடைய வழக்கறிஞர் எனக்கு படித்து காண்பித்தார் தெரியும்.

2. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையில் குறிப்பிட்டுள்ள என்னுடைய தகப்பனாரின் முகவரி 1/E.11, பிள்ளையார் கோவில் தெரு செட்டியப்பனூர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அந்த முகவரி தவறானது. என்னுடைய தகப்பனார் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் அவ்வாறு முகவரி தவறானது என்று குறிப்பிட்டுள்ளாரா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

3. என்னுடைய தகப்பனார் தாக்கல் செய்த எதிர் வழக்குரையிலோ பிறகு கூடுதலாக தாக்கல் செய்யப்பட்ட இரண்டு எதிர் வழக்குரையிலும் பிரதிவாதிகளின் முகவரி தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று கூறவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. இந்த வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்த வழக்காவணங்களை நகல்கள் பெற்று பரிசீலனை செய்து பார்த்தேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணமான வா.சா.ஆ.37–ல் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு ஆட்சேபனை ஏதும் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை.

5. என்னிடம் காட்டப்படும் ஆவணமான வா.சா.ஆ.36–ல் வீட்டு முகவரி 1/187, கீழ்த்தெரு, செட்டியப்பனூர் என முகவரி திருத்தப்பட்டுள்ளது சம்பந்தமாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை.

6. நான் என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் வேண்டுமென்றே வாதியின் முகவரியையும் சேர்த்து தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

7. வழக்கு சொத்து என்னுடைய பாட்டனார் மாணிக்க முதலியார் அவர் கிரயம் பெற்ற ஆவணம் சம்பந்தமாக எனக்கு ஏதேனும் விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

8. வழக்கு சொத்தின் புல எண் விவரம் 161, 162/2 ஆகும். புல எண்.161–ன் மொத்த விஸ்தீரணம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. புல எண்.162/2–ன் மொத்த விஸ்தீரணம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

9. வாதியின் கணவராகிய ராமன் என்பவருக்கு வழக்கு சொத்துக்களை பாகம் பிரித்துக் கொடுக்கப்பட்டதின் எல்லை விவரம் மற்றும் மொத்த விஸ்தீரணம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

10. என்னுடைய தகப்பனாருக்கு பிரித்து கொடுக்கப்பட்ட பாகத்தின் விவரம் எனக்கு தெரியுமா என்றால் புல எண் 161,162/2, அதில் 161/1–ல் 9 சென்டும், 162/2–ல் எவ்வளவு என்ற விவரம் எனக்கு தெரியாது. அதன் நான்கு புற எல்லை விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், மேற்குப் பக்கத்தில் எனது பெரியப்பா முனிரத்தினம் மற்றும் அப்பாவிற்கும் பாகம், கிழக்கே எனது இரண்டு சித்தப்பாக்களாகிய ஆனந்தன் மற்றும் ராமன் என்பவர்களின் பாகம்.

11. இந்த வழக்கு சொத்திற்கும் என்னுடைய அப்பாவிற்கு பாகத்தில் வந்த சொத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய அப்பாவிற்கு பாகம் பிரித்து கொடுக்கப்பட்டதற்கு எழுத்துப்பூர்வமான ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் கூர்சீட்டு உள்ளது, அந்த கூர்ச்சீட்டை ஆவணமாக தாக்கல் செய்து உள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணம் வழக்கில் எந்த ஆவணம் எண்ணாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

12. எனது சித்தப்பா ஆனந்தன் என்பவருக்கு கொடுக்கப்பட்ட பாகத்தின் விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல, அதன் புல எண்.162/2,

மொத்த விஸ்தீரணம் எனக்கு தெரியாது, வடகிழக்கு பகுதியில் அவருக்கு பாகம் கொடுக்கப்பட்டுள்ளது, அதன் நான்கு புற எல்லை விவரம் எனக்கு தெரியாது.

13. எனது பெரியப்பா முனிரத்தினம் என்பவருக்கு கொடுக்கப்பட்ட பாகத்தின் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், அதன் புல எண்.161,162/2, மொத்த விஸ்தீரணம் எனக்கு தெரியாது, தென்மேற்கு பகுதியில் அவருக்கு பாகம் கொடுக்கப்பட்டுள்ளது.

14. கூர்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களின் எந்த சொத்திலாவது கடன் இருந்தால் அந்தந்த நபர்கள் அந்த கடனை அடைத்துக் கொள்ள வேண்டும் என்று சரத்து உள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

15. என்னுடைய பாட்டனர் பாக்கு வியாபாரம் செய்தாரா என்றால் இல்லை புகையிலை வியாபாரம் செய்தார்.

16. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தின் ஐந்தாவது பத்தியில் கூறியுள்ள விவரம் தவறு என்று சொன்னால் சரியல்ல. வாதியினுடைய கணவர் வழக்கு சொத்தின் மீது உள்ள கடனை அடைத்ததற்கு ஆதரவாக ஆவணங்கள் வா.சா.ஆ.19 முதல் வா.சா.ஆ.24 ஆகியவற்றை வாதி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது .

17. ராமனுக்கு பாத்தியப்பட்ட சொத்தை 28.05.1986-ம் தேதியிட்ட வா.சா.ஆ.1 தான பத்திரத்தின் படி வாதியாகிய தேவகி என்பவருக்கு தானமாக கொடுத்துள்ளார் என்றாலும் அது முதல் வாதி தான் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றாலும் சரியல்ல.

18. முனிரத்தினம் என்பவருடைய வீடு பாகத்தையும் சேர்த்து தான் அனுபவித்து வருகிறோம் என்று பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளதற்கு ஆதரவாக ஏதேனும் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை தாக்கல் செய்து உள்ளேன்

என்றால் இல்லை வாய்மொழியாகத்தான் அனுமதி வழங்கினர். எதிர்வழக்குறையில் இது பற்றி ஏதும் கூறவில்லை என்று சொன்னால் சரிதான்.

19. இந்த வழக்கிற்காக புதிய சங்கதிகளை நான் ஜோடிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மாணிக்க முதலியார் என்பவரின் ஆண் வாரிசுகளான முனிரத்தினம், வடிவேலு, ராமன் மற்றும் ஆனந்தன் ஆகியோருக்கு வீட்டு மனைகள் பாகத்தை ஒதுக்கி எடுத்துக் கொண்டு விட்டார்கள் என்று சொன்னால் சரிதான்.

20. வாணியம்பாடி சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 39/2009 தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கும் இந்த வழக்கில் உள்ள வழக்கு சொத்து இருக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாணியம்பாடி சார்பு நீதிமன்றத்தில் அந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையில் சொத்து விவரத்தில் வீடு என்று குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
DN: cn=ESHWAR VISWANATHAN, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: VANIYAMBADI, TIRPUATHUR

District Munsif,
Vaniyambadi.